# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102156

1. District : மயிலாடுதுறை மாவட்டம் | PS: V & AC காவல்நிலையம் | Year: ஆண்டு 2022 | FIR No.: மு.த.அ. எண் 01/2022 | Date: நாள் 15-10-2022

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: CrPC | Sections பிரிவுகள்: 102 CrPC

(iii) Act சட்டம்: Prevention of Corruption Act as amended in 2018 | Sections பிரிவுகள்: 7, 7(A) and 12 of the PC Amendment Act 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 14-10-2022 | Date to : நாள் வரை 15-10-2022

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 16-00 hrs | Time to : நேரம் வரை 02-00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15-10-2022 | Time : நேரம் 04-30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம் 04-30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக · எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடமேற்கு, 1 km

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Block Development office, Mayiladuthurai

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. ஞானசேகரன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 47/2022 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் ஆய்வுக்குழு அலுவலர் | (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தஞ்சாவூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. A. ஜெயராமன், இணை வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மயிலாடுதுறை 2) [illegible] G. [illegible] D/o ஞானசேகரன், Temporary Technical Assistant 3) K. Abarna D/o [illegible], Temporary Technical Assistant 4) V. Maheswari, இளநிலை பொறியாளர் 5) S. [illegible] D/o Stalin, Technical Assistant 6) K. Silambarasan S/o Kennady, Korkai 7) R. Satheesh S/o Ramalingam, Maanthoppu, Sethur (P.O)

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது

இன்று 15.10.2021 ஆம் தேதி அதிகாலை 04.30 மணிக்கு மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் S.மனோகரன் ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.M.குணசேகரன், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்கள் என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்படி வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், திரு.M.குணசேகரன், த/பெ.முத்துகுமரன், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர். பெறுநர், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மயிலாடுதுறை. அய்யா, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் 14.10.2022 ஆம் தேதி பணியில் இருந்தபோது மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலரும், அலுவலக அலுவலர்களும் பசுமை இல்ல வீடு கட்டியவர்களிடமிருந்தும், சாலை போடும் ஒப்பந்தக்காரர்களிடமும் பில் செட்டில்மெண்ட் செய்ய கையூட்டு கேட்டு வாங்குவதாக கிடைத்த தகவலின் பேரில் தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் உத்தரவின் பேரில் 14.10.2022 ந்தேதி மாலை 3 மணியளவில் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்த நான் மயிலாடுதுறை, கலால் கோட்ட அலுவலர் மற்றும்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M. Ammu Priya Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS Mayiladuthurai VACB on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 15/10/2022      [signature] 15/10/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 15-10-2022 10-00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. MANOHARAN
Rank: நிலை DSP(VLAC) No. எண் ..........

தனிவட்டாட்சியர் திரு.K.ஹரிதரன் மற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு அலுவலர்களுடன் சேர்ந்து 14.10.2022 ஆம் தேதி மாலை 16.00 மணி முதல் 15.10.2022 ந்தேதி இரவு 02.00 மணி வரை மயிலாடுதுறை வட்டார வளச்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் வரும் தீபாவளியை முன்னிட்டு ஊராட்சியில் ஒப்பந்தகாரர்கள் மற்றும் அரசு திட்டத்தில் வீடுகட்டும் பயனாளிகள் ஆகியோர்களிடம் மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கையூட்டு தொகை கேட்டு பெற்று அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடியதாக தெரியவந்த தொகையானது வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட பணமாக இருக்கலாம் என்பதன் அடிப்படையிலும், மேற்படி அலுவலர்கள் கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் மற்றும் கொடுத்த கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான 1)திரு.A.ஜெயராமன் என்பவரிடமிருந்து ரூபாய் 22,000/-, 2)திருமதி.G.சுகந்தி என்பவரிடமிருந்து ரூபாய் 20,000/-, 3)செல்வி.K.அபர்ணா என்பவரிடமிருந்து ரூபாய் 7,000/-, 4)திருமதி.V.மகேஷ்வரி என்பவரிடமிருந்து ரூபாய் 5,000/-, 5)செல்வி.S.தேவதர்ஷினி என்பவரிடமிருந்து ரூபாய் 5,000/-, 6)திரு.K.சிலம்பரசன் என்பவரிடமிருந்து ரூபாய் 10,000- மற்றும் 7. திரு.R.சதீஷ் என்பவரிடமிருந்து ரூபாய் 15,000/- ஆக மொத்தம் ரூபாய்.84,000/-ம் கைப்பற்றப்பட்டது. மேலும் நான்கு Mayiladuthurai BDO Office வருகை பதிவேடுகள் ஆகியவையும் இந்த திடீர் ஆய்வின்போது மேல் நடவடிக்கைக்காக திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஆய்வின் போது 1)திரு.A.ஜெயராமன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), மயிலாடுதுறை 2)திருமதி.V.மகேஷ்வரி, இளநிலை பொறியாளர், மயிலாடுதுறை ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. எனவே மேற்படி சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம் ரூபாய் 84,000/-, திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் மகசர் மற்றும் இருவரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை தங்கள் வசம் ஒப்படைக்கின்றேன். எனவே பணம் கைப்பற்றப்பட்ட 1)திரு.A.ஜெயராமன், த/பெ.ஆதிமூலம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), மயிலாடுதுறை, 2)திருமதி.G.சுகந்தி, த/பெ.குணசேகரன், Temporary Technical Assistant, வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ), மயிலாடுதுறை, 3)செல்வி.K.அபர்ணா, த/பெ.கலைமகிழவன், Temporary Technical Assistant, வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ), மயிலாடுதுறை, 4)திருமதி.V.மகேஷ்வரி, த/பெ.வேலழகன், இளநிலை பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலகம், மயிலாடுதுறை. 5)செல்வி.S.தேவதர்ஷினி, த/பெ.ஸ்டாலின், Temporary Technical Assistant, வட்டார வளர்ச்சி அலுவலகம், மயிலாடுதுறை. 6)திரு.K.சிலம்பரசன், த/பெ.கென்னடி, அம்பேத்கார் தெரு, கொற்கை. (Green house Beneficiary). 7)திரு.R.சதீஷ், த/பெ.ராமலிங்கம், மாந்தோப்பு, சேத்தூர் அஞ்சல், மயிலாடுதுறை. (Sub Contractor- Road Work) ஆகியவர்களின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) (M.குணசேகரன்) மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்கள். திடீர் ஆய்வு

செயல்முறை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகசர். இன்று 14.10.2022 ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணிமுதல் மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தை திரு.M.குணசேகரன், த/பெ.முத்துகுமரன், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் அவர்கள், திரு.K.ஹரிதரன், கோட்ட கலால் அலுவலர் (தனிவட்டாட்சியர்), மயிலாடுதுறை மற்றும் மயிலாடுதுறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.S.மனோகரன் மற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர் திரு.M.குணசேகரன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா, மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் வரும் தீபாவளியை முன்னிட்டு ஊராட்சியில் ஒப்பந்தகாரர்கள் மற்றும் அரசு திட்டத்தில் வீடுகட்டும் பயனாளிகள் ஆகியோர்களிடம் மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) மற்றும் அலுவலர்கள் மற்றும் மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) மற்றும் அலுவலர்கள் ஆகியோர் கையூட்டு தொகை கேட்டு பெறுவதாக மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 14.10.2022 ஆம் தேதி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் அவர்களுக்கு தெரிவித்ததன் அடிப்படையில், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் உத்தரவின்படி மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் ஆகிய நான் இன்று 14.10.2022 ஆம் தேதி மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சுமார் 15.00 மணிக்கு வந்தும், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி திரு.K.ஹரிதரன், கோட்ட கலால் அலுவலர், மயிலாடுதுறை அவர்கள் 15.00 மணிக்கு வந்தும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 14.10.2022 ஆம் தேதி மாலை சுமார் 15.45 மணிக்கு அரசு வாகனத்தில் புறப்பட்டு மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சுமார் 16.00 மணிக்கு வந்து, மேற்படி மயிலாடுதுறை விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு.மேற்படி மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகமானது மயிலாடுதுறையில் மயிலாடுதுறை To திருவாரூர் செல்லும் ரோட்டிற்கு மேற்கே மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலக கட்டிடம் கிழக்கு பார்த்த வாயிலுடன்கூடிய இரண்டு தளங்களுடன் அமைந்துள்ளது. மேற்படி தரைதளத்தில் நுழைவு வாயிலுக்கு இடது மற்றும் வலது புறங்களில் முதல் தளத்திற்கு செல்லும் மாடிபடிகளும், அதனை அடுத்து தெற்கு பக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர் வட்டார ஊராட்சி மற்றும் ஆணையரின் அறையும், அதனை அடுத்து மேற்கு பக்கம் வட்டார வளர்ச்சி (வட்டார ஊராட்சி) அலுவலக அறையும் உள்ளது. அதனை அடுத்து கழிவறையும், அலுவலகப்பிரிவுக்கு எதிர்புறம் கணினி அறையும் உள்ளது. கீழ் தள அலுவலகத்தின் வடக்கு பக்கம் ஒன்றிய தலைவர் அறையும் உள்ளது. முதல் தளத்தில் தெற்கு பக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் அறையும் அதனை அடுத்து மேற்கு பக்கமாக வட்டார வளர்ச்சி (கிராம ஊராட்சி) அலுவலக அறையும், அதனை அடுத்து கழிவறையும், அதற்கு வடக்கு பக்கம் ஒன்றிய பணிமேற்பார்வையாளர் அறையும்,

உதவி பொறியாளர் அறையும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் அலுவலகம் மற்றும் எதிர்புறம் கூட்ட அரங்கும் உள்ளது. மேற்படி BDO அலுவலக வளாகத்தின் வடக்கு பக்கம் சிமெண்ட் டோக்கன் கொடுக்கும் அலுவலகமும் உள்ளது. மேற்படி மயிலாடுதுறை BDO(BP) அறையில் திரு.K.அன்பரசு, வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) என்பவரும், அலுவலர்களுக்கான அறையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.A.ஜெயராமன் அவர்களும், முதல் தளத்தில் அலுவலர்களுக்கான அறையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.இந்திராகாந்தி அவர்களும் பணியில் இருந்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சி திருமதி.P.மீனா என்பவர் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூட்டத்தில் கலந்துக்கொண்டு மாலை சுமார் 5.30 மணிக்கு அலுவலகம் வந்தார். வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) அலுவலக அறை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அலுவலக அறையில் அலுவலர்கள் மற்றும் மயிலாடுதுறை வட்டார ஊராட்சிகளை சேர்ந்த நபர்கள், மற்றும் ஒப்பந்தக்காரார்கள் இருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், கோட்ட கலால் அலுவலர் (தனிவட்டாட்சியர்), மயிலாடுதுறை மற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையில் கீழ்கண்ட நபர்கள் வைத்திருந்து ஆஜர் செய்த தொகைகள் சரியான முகாந்திரம் கூறிய தொகை எனத்தெரிய வந்ததால் அந்தத் தொகை சம்மந்தப்பட்ட நபர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடியதாக தெரியவந்த தொகையானது வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட பணமாக இருக்கலாம் என்பதன் அடிப்படையிலும், கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் மற்றும் கொடுத்த கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.84,000/-ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக மகசரில் கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவிமற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்டரூபாய் |
|---|---|---|---|
| 1 | திரு.A.ஜெயராமன், த/பெ.ஆதிமூலம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), மயிலாடுதுறை | 900 | 22,000 |
| 2 | திருமதி.G.சுகந்தி, த/பெ.குணசேகரன், Temporary Technical Assistant, வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ), மயிலாடுதுறை | 4,190 | 20,000 |
| 3 | செல்வி.K.அபர்ணா, த/பெ.கலைமகிழவன், Temporary Technical Assistant, வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ), மயிலாடுதுறை | 200 | 7,000 |

| | | | |
|---|---|---|---|
| 4 | திருமதி.V.மகேஷ்வரி, த/பெ.வேலழகன், இளநிலை பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலகம், மயிலாடுதுறை. | 500 | 5,000 |
| 5 | செல்வி.S.தேவதர்ஷினி, த/பெ.ஸ்டாலின், Temporary Technical Assistant, வட்டார வளர்ச்சி அலுவலகம், மயிலாடுதுறை. | 530 | 5,000 |
| 6 | திரு.K.சிலம்பரசன், த/பெ.கென்னடி, அம்பேத்கார் தெரு, கொற்கை. (Green house Beneficiary) | 810 | 10,000 |
| 7 | திரு.R.சதீஷ், த/பெ.ராமலிங்கம், மாந்தோப்பு, சேத்தூர் அஞ்சல், மயிலாடுதுறை. (Sub Contractor- Road Work) | 1,200 | 15,000 |
| 8 | செல்வகுமார், இளநிலை உதவியாளர் | 1,000 | - |
| 9 | M.இராஜேந்திரன், உதவியாளர் | 380 | - |
| 10 | P.ராணி, அலுவலக உதவியாளர் | 120 | - |
| 11 | கௌன்மெட்டிலா, இளநிலை உதவியாளர் | 240 | - |
| 12 | கணேசன், துணை வட்டார வளரச்சி அலுவலர்(சத்துணவு) | 200 | - |
| 13 | K.கவிதா, அலுவலக உதவியாளர் | 70 | - |
| 14 | C.சங்கீதா, இளநிலை உதவியாளர் | 320 | - |
| 15 | அனுசுயா, இளநிலை உதவியாளர் | 220 | - |
| 16 | குணசேகரன், Temporary Technical Assistant | 3,500 | - |
| 17 | K.ராஜேஷ் கண்ணா, இளநிலை பொறியாளர் | 700 | - |
| 18 | சபரிநாத், Temporary Staff | 1,530 | - |
| 19 | D.சூரியகுமார், Temporary Staff | 130 | - |
| 20 | N.மணிமாறன், Temporary Staff | 690 | - |
| 21 | பாக்கியரதி, Data Entry Operator | 1,150 | - |
| 22 | R.ரேணுகா, Data Entry Operator | 500 | - |
| 23 | R.வித்யா, Data Entry Operator | 330 | - |
| 24 | ஸ்ரீவித்யா, Data Entry Operator | 30 | - |
| 25 | N.ஆனந்தன், ஊர்நல அலுவலர் நிலை -1 | 765 | - |
| 26 | அறிவழகன், உதவியாளர் | 510 | - |
| 27 | D.இந்திராகாந்தி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சி, மயிலாடுதுறை | 1,310 | - |
| 28 | S.அபிஷேக்கா, உதவியாளர் | 650 | - |
| 29 | A.அன்புமணி, உதவியாளர் | 100 | - |
| 30 | S.அலெக்ஸ்ராஜ், வட்டார ஒருங்கிணைப்பாளர் | 270 | - |

| | | | |
|---|---|---|---|
| 31 | S.பாஸ்கர், Data Entry Operator | 210 | - |
| 32 | P.காசிநாதன், Data Entry Operator | 1,000 | - |
| 33 | K.செல்வமணி, Data Entry Operator | 1,510 | - |
| 34 | G.மாதவன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 440 | - |
| 35 | ஜெயராஜ், மறையூர் ஊராட்சி செயலர் | 1,100 | - |
| 36 | R.காயத்திரி, Data Entry Operator | 100 | - |
| 37 | A.அருள்பிரியா, Data Entry Operator | 100 | - |
| 38 | S.விஷ்வநாதன், கடுவங்குடி ஊராட்சி செயலர் | 1,080 | - |
| 39 | P.மீனா, வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) | 340 | - |
| 40 | S.எலிசபெத்ராணி, உதவியாளர் | 2,520 | - |
| 41 | C.சுமதி, உதவியளார் | 900 | - |
| 42 | P.கவியரசு, உதவியாளர் | 2,360 | - |
| 43 | P.வாணி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 330 | - |
| 44 | J.மீனாட்சி, தட்டச்சர் | 500 | - |
| 45 | K.மாரியப்பன், உதவியாளர் | 550 | - |
| 46 | மணிவண்ணன், இளநிலை உதவியாளர் | 400 | - |
| 47 | A.குருபிரசாத், இளநிலை உதவியாளர் | 700 | - |
| 48 | M.லாவண்யா, Data Entry Operator | 500 | - |
| 49 | அஜய்சிங், Temporary Technical Assistant | 240 | - |
| 50 | T.பாலாஜி, Temporary Technical Assistant | 550 | - |
| 51 | N.கம்பன், ஒன்றிய பணிமேற்பார்வையாளர் | 1,250 | - |
| 52 | T.அரவிந்தன், Temporary Technical Assistant | 210 | - |
| 53 | S.கணேஷ்பாபு, Temporary Technical Assistant | 600 | - |
| 54 | K.அன்பரசு, வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) | 1,200 | - |
| 55 | R.செந்தில், த/பெ.ரெத்தினவேல், சோழம்பேட்டை. | 81,770 | - |
| 56 | பாலகுரு, த/பெ.ஜெகநாதன், கொற்கை. | 27,650 | - |
| 57 | R.கணேஷ் பாபு, த/பெ.ராமச்சந்திரன், அகரகீரங்குடி. | 13,450 | |
| | மொத்தம் | **1,64,605** | **84,000** |

மேற்படி திடீர் சோதனையின்போது திரு.A.ஜெயராமன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) மயிலாடுதுறை என்பவரின் மேஜையை சோதனை செய்ய அவருக்கு சொந்தமான கருப்பு நிற கைபையிலிருந்து ரூபாய் 22,000/- யையும் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 900/- பணத்தையும் எடுத்து ஆஜர் செய்தார். அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் 900/- திரு.A.ஜெயராமன், துணை வட்டார

வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டு, சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 22,000/- மட்டும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது திருமதி.G.சுகந்தி, த/பெ.குணசேகரன், Temporary Technical Assistant, வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ), மயிலாடுதுறை என்பவர் வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சியின் உதவிபளார் திரு.அறிவழகன் என்பவரிடம் பணிபுரிவதாக தெரிவித்தவரை விசாரிக்க அவரது ஹேண்ட் பேக்கிலிருந்து ரூபாய் 20,000/- மற்றும் 4,190/- ஆகியவற்றை தனித்தனியாக எடுத்து ஆஜர் செய்தவர் சரியான முகாந்திரம் கூறிய அவரது சொந்த பணம் ரூபாய் 4,190/- திருப்பிக்கொடுக்கப்பட்டு சரியான முகாந்திரம் கூறாததால் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்காக கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 20,000/- மட்டும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது செல்வி.K.அபர்ணா, த/பெ.கலைமகிழவன், Temporary Technical Assistant, வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ), மயிலாடுதுறை என்பவரை விசாரிக்க அவர் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.மாதவன் என்பவருக்கு உதவியாக பணிபுரிவதாக தெரிவித்தவர் தனது ஹேண்ட் பேக்கிலிருந்து ரூபாய் 7,000/- பணம் மற்றும் ரூபாய் 200/- தனித்தனியாக எடுத்து ஆஜர் செய்தார். சரியான முகாந்திரம் கூறிய சொந்த பணம் ரூபாய் 200/- அவரிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டது. சரியான முகாந்திரம் கூறாததால் குற்ற முறு நடவடிக்கையின் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்காக கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 7,000/- மட்டும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது திருமதி.V.மகேஷ்வரி, த/பெ.வேலழகன், இளநிலை பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலகம், மயிலாடுதுறை என்பவரை அவரது அறையில் விசாரித்து சோதனை செய்ய அவரது ஹேண்ட் பேக்கிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய் 5,000/- மற்றும் ரூபாய் 500/- ஆகியவற்றை தனித்தனியாக எடுத்து ஆஜர் செய்தார். சரியான முகாந்திரம் கூறிய சொந்த பணம் ரூபாய் 500/- அவரிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டது. சரியான முகாந்திரம் கூறாததால் குற்ற முறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 5,000/- மட்டும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது செல்வி.S.தேவதர்ஷினி, த/பெ.ஸ்டாலின், Temporary Technical Assistant, வட்டார வளர்ச்சி அலுவலகம், மயிலாடுதுறை ஒன்றிய பணிமேற்பார்வையாளருக்கான கட்டிடத்தில் விசாரித்து சோதனை செய்ய அவர் தனது பையிலிருந்து 5,000/- பணம் மற்றும் 530/- ஆகியவற்றை தனித்தனியாக எடுத்து ஆஜர் செய்தார். சரியான முகாந்திரம் கூறிய சொந்த பணம் ரூபாய் 530/- அவரிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டது. சரியான முகாந்திரம் கூறாததால் குற்ற முறு நடவடிக்கையின் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்காக கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 5,000/- மட்டும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது திரு.K.சிலம்பரசன், த/பெ.கென்னடி, அம்பேத்கார் தெரு, கொற்கை என்பவரை வட்டார ஊராட்சியில் வைத்து விசாரிக்க அவர் Green House வீட்டிற்கான இறுதி தொகைக்கான செக் வாங்குவதற்காக

BDO அலுவலகத்திற்கு பணம் கொண்டு வந்ததாக தெரிவித்தவர் அவரது சட்டை பாக்கெட்டில் இருந்து ரூபாய் 10,000/- மற்றும் ரூபாய் 810/- ஆகியவற்றை தனித்தனியாக எடுத்து ஆஜர் செய்தார். சரியான முகாந்திரம் கூறிய சொந்த பணம் ரூபாய் 810/- அவரிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டது. சரியான முகாந்திரம் கூறாததால் குற்ற முறு நடவடிக்கையின் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 10,000/- மட்டும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது திரு.R.சதீஷ், த/பெ.ராமலிங்கம், மாந்தோப்பு, சேத்தூர் அஞ்சல், மயிலாடுதுறை. (Sub Contractor) என்பவரை விசாரிக்க அவர் தனக்கு 2 பில் தொகை ரூபாய் 20,00,000/- இன்னும் வரவில்லை என்றும் மேலும் அவர் சீனிவாசன் என்ற ஒப்பந்தகாரருக்கு Sub contractor ஆக இருந்து மேற்படி வேலையை பார்த்ததாக கூறினார். அந்த ரூபாய் 20,00,000/- பில் தொகையை பெறுவதற்காகதான் பணத்தை BDO அலுவலகத்திற்கு கொண்டுவந்ததாக கூறுகிறார். மேலும் இரண்டு பில்லில் ஒன்று ரூபாய் 11,00,000/- இல் மேலாநல்லூர் பஞ்சாயத்தில் தூர்வாரி இரண்டு படித்துறை மற்றும் பைப் கல்வெட்டு அமைத்தல் பணி செய்ததற்கும், மற்றொன்று மேலாநல்லூர் பஞ்சாயத்தில் சிமெண்ட் சாலை போட்டதற்கும் ரூபாய் 9,00,000/- பில் இன்னும் வரவில்லை என்று கூறியவர் தனது கால்சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 15,000/- மற்றும் 1,200/- ஆகியவற்றை தனித்தனியே எடுத்து ஆஜர் செய்தவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்த பணம் ரூபாய் 1,200/- அவரிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டது. சரியான முகாந்திரம் கூறாததால் குற்ற முறு நடவடிக்கையின் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 15,000/- மட்டும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் மற்றும் கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய். 84,000/- மற்றும் Mayiladuthurai BDO Office Attendance Register 2022, Mayiladuthurai BDO Office Movement Register 2022, Mayiladuthurai BDO Office Abstract Register 2022, Mayiladuthurai BDO Office Delay Attendance Register 2022 ஆகியவை இந்த திடீர் ஆய்வின்போது மேல் நடவடிக்கைக்காக திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின்போது மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர் மற்றும் கோட்ட கலால் அலுவலர் தனிவட்டாட்சியர் ஆகியோர் 1)திரு.A.ஜெயராமன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), மயிலாடுதுறை 2)திருமதி.V.மகேஷ்வரி, இளநிலை பொறியாளர், மயிலாடுதுறை ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 15.10.2020 ஆம் தேதி இரவு 02.00 மணிக்கு முடிக்கப்பட்டது. Hon'ble Madam, Received a complaint from the District Inspection cell Inspector, Thanjavur on 15.10.2022 at 04.30 hrs and registered a case in Mayiladuthurai (V&AC) Crime

No:01/2022, u/s 102 CrPC and 7, 7(A) and 12 of Prevention of Corruption A. as amended in 2018 on 15.10.2022 at 05.00 hrs by me.

S. Jambe 15/10/2022

(S.MANOHARAN),
Deputy Superintendent of Police,
Vigilance and Anti Corruption,
Mayiladuthurai.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் அசல், எதிரிகள் 1)திரு.A.ஜெயராமன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), மயிலாடுதுறை 2)திருமதி.V.மகேஷ்வரி, இளநிலை பொறியாளர், மயிலாடுதுறை ஆகியவர்களின் வாக்குமூலங்கள் அசல் ஆகியவற்றை மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் நீதிமன்றம், நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

S. Jambe 15/10/2022

(S.MANOHARAN),
Deputy Superintendent of Police,
Vigilance and Anti Corruption,
Mayiladuthurai.